


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.3.2026) மாலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் – உயர்நீதிமன்றத்தின்

# பெண் வழக்கறிஞர்கள் உள்பட 160 வழக்கறிஞர்கள் கழகத்தில் இணைந்தனர்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!



**சென்னை, மார்ச் 20-**

**முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் முன்னிலையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில், முன்னாள் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் பி.எச்.மனோஜ் பாண்டியன், வழிகாட்டுதலின்படி சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட 160க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்னிலையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில், முன்னாள் எம்.எல்.ஏ. வழக்கறிஞர் பி.எச்.மனோஜ் பாண்டியன், வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (18.3.2026) மாலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்களான பி.விஜய குமார், டி.நந்தகுமார், ஏ.சத்யா, சி.ராகவன், ஏ.டி. நாகேந்திரன், எஸ்.குணசேகரன், எம்.பெருமாள், ஜி.ஜெய்சிங்க, முத்துகுமரன், எஸ்.பாலாஜி, ரோட்டரி என்.சிவக்குமார், நிக்சன், திருமதி. அதிசயா, டி.பவித்ரா, பி.லீனா உள்ளிட்ட 160க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, அமைச்சர் பி.கே. சேகர்பாபு, முன்னாள் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் பி.எச்.மனோஜ் பாண்டியன், தி.மு.க. சட்டத்துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை, வழக்கறிஞர் திருமாறன், வழக்கறிஞர் ஆர்.வி. பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

# உழைப்போர் உரிமை இயக்கம் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு!



**சென்னை, மார்ச் 20-**

**முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து உழைப்போர் உரிமை இயக்கத்தின் மாநில நிர்வாகிகளான ஆலோசகர் எஸ்.குமாரசாமி, மாநில தலைவர் கு.பாரதி, பொதுச்செயலாளர் எஸ்.ஜானகிராமன், செயலாளர் கே.சுரேஷ், பொருளாளர் பி.நாகராஜ், மாவட்ட இணை அமைப்பாளர்கள் எஸ்.யுவராஜ், எம்.உமார்பாரூக் ஆகியோர் வரும் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.03.2026) மாலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் உழைப்போர் உரிமை இயக்கத்தின் (UUI) மாநில நிர்வாகிகளான ஆலோசகர் எஸ்.குமாரசாமி, மாநில தலைவர் கு.பாரதி, பொதுச்செயலாளர் எஸ். ஜானகிராமன், செயலாளர் கே.சுரேஷ், பொருளாளர் பி.நாகராஜ், மாவட்ட இணை அமைப்பாளர்கள் எஸ்.யுவராஜ், எம்.உமார் பாரூக் ஆகியோர் நேரில் சந்தித்து சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களை, மாநகராட்சியில் மீண்டும் பணியமர்த்திமைக்கு நன்றி தெரிவித்ததோடு எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், மதச்சார்பின்மை மற்றும் மாநில உரிமைகளுக்காக தி.மு.கழகத்திற்கும் – அதன் கூட்டணிக்கட்சிகளுக்கும் தங்கள் ஆதரவை தெரிவித்தனர். அதுபோது, அமைச்சர் பி.கே.சேகர்பாபு உடனிருந்தார்.

### சித்தரேவு முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் சார்பில்

# அனைத்து மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!

### அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டார்!

*திண்டுக்கல், மார்ச் 20 -*

சித்தரேவு முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் சார்பில் அனைத்து மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், சித்தரேவு முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் சார்பாக அனைத்து மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முகைதீன் ஆண்டவர் முத்தவல்லி சாகுல்ஹமீது, செயலாளர் நயினார் முகமது, பொருளாளர் அபுசகுமான் ஆகியோர் தலைமை தாங்கினார்கள்.

சிறப்பு அழைப்பாளராக ஊரக வளர்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கலந்து கொண்டு பேசுகையில் அனைத்து சமுதாய மக்களும் இந்த நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் (இப்தார்) கலந்து கொண்டிருப்பது மத நல்லிக்கத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

ஒவ்வொரு வருடமும் இந்த பள்ளிவாசலில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் பெருமையாக உள்ளது. காரணம் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை ஆத்தூர் தொகுதியில் எனக்கு ஆதரவு அளித்து வரும் இஸ்லாமிய சமுதாய மக்களில் சித்தரேவில் வசிக்கும் இஸ்லாமிய சமுதாய மக்கள் காட்டும் அன்பு அளவில்லாதது. சித்தரேவு ஊராட்சியை பொறுத்த வரை அனைத்து சமுதாய மக்களின் கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்றி கொடுத்துள்ளோம்.

இப்பகுதி விவசாயிகள் நலன் கருதி சாலை வசதி, பாலம் வசதி, நீர்வரத்து வாய்க்கால் வசதி போன்ற அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றார். தமிழகம் அனைத்து சமுதாய மக்களும் ஒற்றுமையுடன் வாழக்கூடிய மாநிலமாக உள்ளது. இதை சிலர் குறுக்கு வழியில் கெடுக்க பார்க்கிறார்கள். திராவிட மாடல் ஆட்சி மதநல்லிணத்துக்கை காக்கும் என்றார்..

நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளை யார் நத்தம் முருகேசன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.முரளிதரன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், அய்யம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ரேகா அய்யப்பன், பேரூர் கழக செயலாளர் தங்கராஜ், பேரூராட்சி மன்ற தலைவர்கள் நந்தகோபால், போதும் பொண்ணு முரளி சிறுபான்மையினர் பிரிவைச் சேர்ந்த செல்ல மரக்காயர் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி, அம்பை ரவி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, சாதிக், செல்வி காங்கேயன், வசந்தகுமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் காங்கேயன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன் கணேசன், சாதிக், ஆத்தூர் ஒன்றிய சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் பெரோஸ் கான், யூசுப், ஒன்றிய பிரதிநிதி அப்துல்சலாம், துணைச் செயலாளர் அஜ்மீர், பொருளாளர் ராஜாமுகமது, மணலூர் ஜெயராஜ், மற்றும் சித்தரேவு ஊராட்சி பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மண்டலப் பொறுப்பாளர், உணவு மற்றும் உணவு பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, கழக மகளிர் அணி துணை செயலாளர், மனித வள மேலாண்மை துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கினர். இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சித்தரேவு முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் சார்பாக அனைத்து மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டார். ஆத்தூர் தொகுதியில் உள்ள இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன் என அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். அருகில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடராஜன், ஒன்றிய செயலாளர் இராமன் மற்றும் பள்ளிவாசல் மூத்த நிர்வாகிகள் உள்ளனர்.